பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 25 புதன்கிழமை 10.08.2022 கதிர் 167

## யாழில் வாள்வெட்டு; இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பலொன்று நடத்திய வாள் வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாய மடைந்துள்ளார்.

மகேஸ்வரன் டிவ்யன் (வயது 25) என்ற இளைஞரே வாள்வெட்டில் படுகாய ☞2

# கோட்டாபய நாளை தாய்லாந்து பயணம்?

## ஆபத்தையடுத்து சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வருவது இடைநிறுத்தம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை தாய்லாந்து நோக்கிப் பயணிக்கவுள்ளார் என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியையடுத்து, ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லம் மற்றும் அலுவலகத்தை மக்கள் கையகப்படுத்தியதால் ஏற்பட்ட அமைதியின்மை யைத் தொடர்ந்து, கடந்த மாதம் 13ஆம் திகதி மாலை தீவுக்குத் தப்பியோடிய கோட்டாபய ராஜபக்ஷ, அங்கி ருந்து மறுநாள் சிங்கப்பூருக்குச் சென்று ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்திருந்தார். ☞2

## சீனக் கப்பல் தலையிடி; பின்னணியில் பஸில்!

### டியூ குணசேகர குற்றச்சாட்டு



சீனக் கப்பல் பிரச்சினை தொடர்பில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தலையீட்டுக்குப் பின்னணியில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட குழு இருக்கின்றது என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ☞2

## 22ஆவது திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு



அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

## ஆசிரியர் – மாணவன் கைகலப்பு; இருவரும் வைத்தியசாலையில்!



கம்பளை நகரில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றின் ஆசிரியருக்கும் மாணவர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவரும் காயமடைந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மாணவனின் செவிப்பறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் பரிசோதனை செய்வதற்காக அவர் பேராதனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ☞2

## வவுனியாவில் கொரோனாவால் ஒருவர் மரணம்

வவுனியாவில் மீண்டும் கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய குடும்பஸ்தர் மூச்சுத் திணறல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், அவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக ஹரேந்திரன் நியமனம்



ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராகவும் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராகவும் ஊடகவியலாளர் கிருஷ்ணசாமி ஹரேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மிக இள வயதிலேயே ஊடகத்துறையில் இணைந்து கொண்ட ஹரேந்திரன் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் பல்வேறு ஊடகத் தளங்களில் ☞2

## நாடாளுமன்றில் ஒரு சட்டம்; மக்களுக்கு வேறு சட்டமா?

### சபையில் சஜித் கேள்வி



நாடாளுமன்றத்துக்குள் ஒரு சட்டமும் நாட்டு மக்களுக்கு வேறு சட்டமும் நடைமுறையில் உள்ளதா என்பதை சபாநாயகர் உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ☞2

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

தனிப்பட்ட தகராறு காரணமாகக் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவின் கலஹபிடிய பிரதேசத்தில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் வெட்டுக் காயங்களுக்குள்ளான குறித்த நபர் மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## ‘மொட்டு’விலிருந்து வெளியேறியோர் தலைமையில் புதிய கூட்டணி உதயம்

### ஒகஸ்ட் 21இல் அங்குரார்ப்பண நிகழ்வு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேறிய பங்காளிக் கட்சிகள் இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளன.

குறித்த கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வு ☞2


## பாடசாலை மாணவனின் உயிரைப் பறித்த ஊஞ்சல்

மொரட்டுமுல்ல-வில்லோராவத்த பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவர் திடீர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

பாடசாலை இடைவேளையின் போது மாணவர்களுடன் குறித்த பாடசாலை மாணவன் இரும்பு ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த போது, எதிர்பாராமல் தவறி விழுந்துள்ளார்.

குறித்த மாணவன் பலத்த காயங்களுடன் லுனாவ ☞2

## ஐ.தே.கவைக் கட்டியெழுப்ப ருவான் குழுவினர் வியூகம்



ஐக்கிய தேசியக் கட்சியைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தலைமையிலான குழுவொன்று இதற்கான வியூகத்தை வகுத்து வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கமைய கட்சியைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

## ‘மொட்டு’க் கட்சி மறுசீரமைப்பு

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சி மறுசீரமைக்கப்படவுள்ளது.

அதற்கமைய பொதுஜன முன்னணியின் தேசிய மாநாடு விரைவில் நடைபெறவுள்ளது.

அதன்போது கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நீக்கப்படவுள்ளார்.

டலஸ் ஆதரவு அணி உறுப்பினரான ஜி.எல். பீரிஸிடமிருந்து பறிக்கப்படும் தவிசாளர் பதவி, கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படலாம் ☞2

## யாழில் வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மடைந்தார்.

படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## குடும்பஸ்தர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

58 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் மற்றும் சந்தேகநபருக்கு இடையில் காணப்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். எனினும், அவர் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'மொட்டு'விலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது எனவும், கூட்டணியின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் அன்றைய தினமே அறிவிக்கப்படும் எனவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான புதிய ஹெள உறுமய, இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, யுதுகம அமைப்பு, எமது மக்கள் சக்தி உட்பட மேலும் சில கட்சிகளும், தேசியவாத அமைப்புகளும் கூட்டணியில் இணைகின்றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்றிரவு கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே கூட்டணி தொடர்பான விவரத்தை எதிர்வரும் 21ஆம் திகதி வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினரையும் புதிய கூட்டணியில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனினும், இது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் புதிய கூட்டணியில் இணையக்கூடும் எனத் தகவல் வெளியாகியிருந்தாலும், அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை. சுதந்திரக் கட்சி தனிவழி செல்வதற்கான சாத்தியமே அதிகம் என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. எனினும், தேர்தல் கால கூட்டணிக்கு பச்சைக்கொடி காட்டும் சாத்தியம் உள்ளது.

டிரான் அலஸ் மற்றும் அதாவுல்லாவின் கட்சிகள் ஆரம்பத்தில் 10 கட்சிகளின் சுயாதீனக் கூட்டணியில் இருந்தாலும், தற்போது அரசுக்கு ஆதரவளித்து கூட்டணியிலிருந்து விலகிவிட்டன.

## ஆசிரியர் - மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தரம் 13 இல் கல்வி கற்று வரும் குறித்த மாணவன் சம்பவ தினம் காலை தனது தலைமுடியை வளர்த்துக்கொண்டு வந்தார் என்று தெரியவருகின்றது. இதன்போது குறித்த ஆசிரியர் அது குறித்து மாணவனிடன் வினவியபோது இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரியர், மாணவனின் கன்னத்தில் அறைந்தார் எனவும், இதன்போது குறித்த மாணவன் ஆசிரியரை அருகேயிருந்த பள்ளத்தில் தள்ளிவிட்டார் எனவும் தெரியவருகின்றது.

இதையடுத்துச் சக ஆசிரியர்கள் இணைந்து இருவரையும் கம்பளை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனக் கூறப்படும் மேற்படி சம்பவம் தொடர்பாகக் கம்பளைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பாடசாலை மாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் 14 வயதுடையவர் என்பதுடன் பஹல மொரட்டுவ பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனக் கப்பல்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் டியூ குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

சீனக் கப்பல் விவகாரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் தலையிட்டு சீனாவின் நல்லெண்ணத்தை பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டால் அதனை இரு நாடுகளும் இணைந்து தீர்த்துக் கொள்ள வேண்டும்.

வேறு தரப்பினர் தலையிட வேண்டிய அவசியமில்லை. அணிசேரா கொள்கையின்படி இலங்கை செயற்பட வேண்டும் - என்றார்.

## நாடாளுமன்றில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று அவர் உரையாற்றும்போது மேலும் கூறுகையில்,

நாடாளுமன்றத்திலும், சபாபீடத்திலும் பொதுச் சொத்துச் சட்டம் செல்லாது என்ற பொய்யான கருத்து நேற்று வெளியிடப்பட்டது. குற்றவியல் சட்டம் இந்தச் சபையில் செல்லுபடியாகாது என்பதை சபாநாயகர் அறிவிக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள அதிகாரங்கள் குறித்து நாட்டையே தவறாக வழிநடத்தும் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

52 நாள் ஆட்சிக் கவிழ்ப்பு சதித்திட்ட காலப்பகுதியில் சபையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தற்போதைய அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் வழங்கிய கருத்து குறித்து சபாநாயகர் விளக்கம் அளிக்க வேண்டும் - என்றார்.

## பிரதிப் பணிப்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார்.

சக்தி தொலைக்காட்சியின் செய்திப் பிரிவில் ஹரேந்திரன் தனது ஊடகப் பயணத்தை ஆரம்பித்தார்.

செய்தியாளர், சூரியனின் பேப்பர் பொடியன், செய்தி ஆசிரியர், தொகுப்பாளர், பத்திரிகையாளர், தொலைக்காட்சி செய்திப் பிரிவு பணிப்பாளர், ஊடக பயிற்றுவிப்பாளர், சுயாதீன ஊடகவியலாளர், சர்வதேச ஊடக செய்தியாளர் (BBC, Germen Tv, PW) எனப் பல்வேறு துறைகளில் தனது திறமைகளை மிளிரச் செய்துள்ளார்.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான ஹரேந்திரன், சர்வதேச புலனாய்வுச் செய்தி அறிக்கை தொடர்பிலான விசேட கற்கை நெறிகளை நோர்வேயில் பூர்த்தி செய்துள்ளார் என்பதுடன், அமெரிக்காவின் ஐரெக்ஸ் ஊடகப் பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

இலங்கையில் டிஜிற்றல் ஊடக தொழில்நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்த சர்வதேச ரீதியிலான அனுபவங்களை உடைய விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழ் இளம் ஊடகவியலாளர்களில் ஹரேந்திரனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் சமூக சேவையாளராகவும், யோகா ஆசிரியராகவும், ஆளுமை விருத்தி பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக ஙனுக கருணாரட்ன ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராகவும், தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராகவும் ஹரேந்தின் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'மொட்டு'க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என எதிர்பார்க்கப்படுகின்றது.

தலைவர் பதவியில் மஹிந்த ராஜபக்சவும், பொதுச்செயலாளர் பதவியில் சாகர காரியவசமும் நீடிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி நாமல் ராஜபக்சவுக்கு வழங்கப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

தற்போது தேசிய அமைப்பாளர் பதவி வகிக்கும் பஸில் ராஜபக்ச, கட்சி மறுசீரமைப்பின் பின்னர் ஆலோசகர் மட்டத்தில் செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கோட்டாபய நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது வரையிலும் சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து நாளை வெளியேறி தாய்லாந்தின் தலைநகர் பேங்கொக்குக்குச் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது எனப் பெயர் குறிப்பிட விரும்பாத இரண்டு தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கைகளுக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு உடனடியாக பதிலளிக்கவில்லை என்றும், தாய்லாந்து அரசின் செய்தித் தொடர்பாளர் ரட்சடா தனடிரெக் இது குறித்து ரொய்ட்டர்ஸிடம் கருத்து வெளியிட மறுத்துவிட்டார் என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை விட்டு வெளியேறியதில் இருந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பொது வெளியில் தோன்றவோ, கருத்துக்களைத் தெரிவிக்கவோ இல்லை.

மேலும், தாம் அவருக்கு எந்தச் சலுகைகளையும் விலக்குகளையும் வழங்கவில்லை என்று சிங்கப்பூர் அரசு கூறியிருந்தது.

எவ்வாறாயினும், சிங்கப்பூரில் அவருக்கு நாளை வரை (ஓகஸ்ட் 11) குறுங்கால பயண அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதி காலம் நாளையுடன் முடிவடையவுள்ள நிலையில் அவர் தாய்லாந்து செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, எதிர்காலத்தில் இலங்கைக்குத் திரும்புவதைத் தவிர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஜூலை 31ஆம் திகதி வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு அளித்த பேட்டியில், கோட்டாபய திரும்பி வருவதற்கான நேரம் இது என்று நான் நம்பவில்லை என்று ஜனாதிபதி ரணில் கூறியிருந்தார்.

அத்துடன், கோட்டாப ராஜபக்ஷ இலங்கை திரும்பினால், அவருக்கு எதிராக ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டால், அவருக்குச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கிடைக்காது என்றும் சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காலிமுகத் திடல் காலி

**மக்களின் எழுச்சியை – கருத்து நிலையை – தவறாகக் கற்பிதம் பண்ணுவோர் பிழையான பாடங்களைத்தான் படிக்க வேண்டி நேரும்.**

**காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் கதியும் அதுவாகத்தான் முடிந்திருக்கின்றது.**

**மக்களின் எழுச்சியின் தாற்பரியத்தைத் தங்கள் வசதிக்கும், விருப்புக்கும், இலக்குக்கும் ஏற்ற மாதிரி அர்த்தம் பண்ண – அல்லது வளைக்க – முயன்றதின் விளைவை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி நேர்ந்துள்ளது.**

**காலிமுகத் திடல் போராட்டம் ஒவ்வொரு 9ஆம் திகதியும் அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்று பார்த்தால் அந்தப் போராட்டத்திற்கு முடிவு கட்டும் திகதியாகவும் அதுவே அமைந்து விட்டமை துரதிர்ஷ்டம்தான்.**

**மே 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை துறந்தார். ஜூன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ எம்.பி. பதவியை விட்டு விலகினார். ஜூலை 9ஆம் திகதி நாட்டின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவே பதவியை விட்டு ஓட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.**

**அதை அடுத்து ஒகஸ்ட் 9ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டம் அடுத்த கட்டமாக அருஞ்சாதனை ஒன்றைச் செய்யப் போகின்றது என்று பலரும் எதிர்வு கூறினர்.**

**ஆனால் கடைசியாக காலிமுகத் திடல் போராட்டக் களத்திற்கே முடிவுரை எழுதும் நாளாக அது முடிந்துவிட்டது.**

**இந்தத் துரதிர்ஷ்ட நிலைக்குக் காரணம் யாது?**

**இந்த மக்கள் போராட்டத்தின் எழுச்சியின் பின்னால் அமைந்த காரணங்களை சம்பந்தப்பட்ட தரப்புகள் தத்தமது அரசியல் நோக்குகளுக்கும் இலக்குகளுக்கும் ஏற்ப திசை திருப்ப முயன்றமையே இத்துன்பியல் முடிவுக்குக் காரணம்.**

**மக்கள் எழுச்சியைத் தங்களின் தனிப்பட்ட அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கான தளமாக மாற்ற முற்பட்ட அரசியல் சக்திகளை, இந்த பின்னடைவுக்கு முழுப் பொறுப்பு.**

**'கோட்டா கோ கம' போராட்டம் அரசியல் பின்னோக்கம் இல்லாமல் சுயாதீனமாகத்தான் முதலில் கட்டவிழ்ந்தது.**

**மோசமான ஆட்சி முறைக்குக் காரணமான ராஜபக்ஷ குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரே கருத்தியல் மக்கள் மத்தியில் எழுச்சியாகப் பற்றிக் கொண்டிருந்தது. இந்தப் போராட்டம் அதற்கு வழி காட்டியதால் மக்கள் அதில் மடைதிறந்த வெள்ளம் போல திரண்டனர்.**

**அப்படி மக்கள் திரண்டமையைப் பார்த்ததும் அரசியல் சக்திகள் அந்த மக்கள் எழுச்சியைத் தங்கள் இலக்குகளை எட்டுவதற்கான பலமாக அதனை மாற்ற முற்பட்டனர். மக்களின் அந்தக் கூட்டு எழுச்சிக்கும், ஐக்கியப்பட்ட ஒன்றிணைவுக்கும் தத்தம் விருப்பப்படி அரசியல் அர்த்தங்கள், இலக்குகள், நோக்கங்கள் கற்பித்தனர்.**

**அதனால்தான் மக்கள் ஆதரவை இழந்த நிலையில், போராட்டத்தைக் கைவிடுகின்றோம் என்று கடைசி வரைக் காத்திருந்து கலைத்துவிட்டு, இப்போது ஒதுங்க வேண்டிய அவல நிலை அந்தப் போராட்டத்தில் எஞ்சியோருக்கு ஏற்பட்டது.**

**'அறகல்ய' போராட்டக் களத்தின் தாற்பரியத்தைப் புரியாமல், தமிழர் அரசியலுக்கான தளமாக அதைப் பயன்படுத்த முயன்ற தலைவர்களுக்கும் இந்த முடிவு அதிர்ச்சியைத் தந்திருக்கும். ஆனால் இது எதிர்பார்க்கப்பட்டதே.**

**யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்து கொண்டு, மக்கள் கருத்தியலை உள்வாங்கியபடி, அரசியல் நகர்வுகளை முன்னெடுத்தால் செல்வாக்கு இழக்கும் போராட்டத் தரப்பைக் கட்டி அரவணைத்துக் கவிழ வேண்டிய நிலை வந்திராது.**

# நாட்டில் 2-3 மாதங்களில் மருந்துகள் முடிந்துவிடும் கர்ப்பிணிப் பெண்களின் உயிருக்கு ஆபத்து வரலாம்!

### ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் எச்சரிக்கை

அடுத்த 2 - 3 மாதங்களில் இலங்கையில் அதிகமான மருந்துகளின் கையிருப்பு தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதிய அமைப்பு, ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத்தை நிலைநிறுத்துவதற்கு முக்கியமான 3 மாத மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருள்களை சுகாதார அமைச்சகத்திடம் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒப்படைத்தது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் கூற்றுப்படி, இலங்கையின் சமூக,பொருளாதார நெருக்கடி பொது வைத்தியசாலைகளில் பல அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ பொருள்கள் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் அடுத்த 2-3 மாதங்களில் அதிக மருந்துகளின் கையிருப்பு தீர்ந்து போய் விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தாய்வழி சுகாதாரம் மற்றும் கருத்தடைக்கான அணுகல் உள்ளிட்ட பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத் சேவைகளை வழங்குவதை கடுமையாகப் பாதிக்கின்றது.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருள்கள் இல்லாததால் 2 லட்சத்து 15 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். அவர்களில் 11 ஆயிரம் பேர் இளம்பெண்களாவர் என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் அமைப்பு, இலங்கையில் அவசர உதவிக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன், அடுத்த ஆறு மாதங்களில் 20 லட்சம் பெண்கள் மற்றும் சிறுமிகளின் தேவைகளை அடைவதற்கு கூடுதலாக ஒரு கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குமாறு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளது.

# ஜீவந்த பீரிஸ் தாக்கல் செய்த அடிப்படை உரிமைமனு தொடர்பில் சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிப்பு

காலிமுகத்திடல் போராட்டத்தில் முக்கிய பங்கை வகித்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு தொடர்பில் தமக்கு கடும் ஆட்சேபனை இருப்பதாக சட்டமா அதிபர் நேற்று (செவ்வாய்க்கிழமை) உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளரான ஜீவந்த பீரிஸ், தம்மை கைது செய்வதை தடுக்குமாறு உத்தரவிடுமாறு கோரி, உயர் நீதிமன்றில் முன்னர் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட அரச சட்டத்தரணி வீந்திர விக்கிரம, முறையான நீதி நடைமுறைகளை பின்பற்றாமல் சுருக்கமான முறைகளில் நிவாரணம் கோரும் சமர்ப்பிப்பை அங்கீகரிக்க முடியாது என வாதிட்டுள்ளார்.

தெஹிதெனிய, எஸ்.துரைராஜா மற்றும் யசந்த கோதாகொட ஆகிய நீதியரசர்கள் அடங்கிய அமர்விலேயே இந்த மனு விசாரணைக்கு வந்துள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் யோர்க் வீதிக்குள் நுழைவதற்கு தடை உத்தரவு பிறப்பித்திருந்ததாக குறிப்பிட்ட அரச சிரேஷ்ட சட்டத்தரணி, மே 27ஆம் திகதி மனுதாரருக்கு இதனை கோட்டை பொலிஸார் அறிவித்தனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், சட்டவிரோதமாக ஒன்றுகூடல், நீதிமன்ற அவமதிப்பு, அரச ஊழியர் ஒருவரின் கடமைகளுக்கு இடையூறு செய்தல், குற்றவியல் தாக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் மனுதாரருக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை செய்துள்ளனர் எனவும், மனுதாரர் நீதிமன்ற உத்தரவை மீறி செயல்பட்டார் எனவும் அரச சிரேஷ்ட சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

மேலும், சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும், எனினும் பொலிஸாரின் அறிவித்தலுக்கு அமைய மனுதாரர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை எனவும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மனுதாரர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்செகுலரத்ன, அருட்தந்தையை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு தனது கட்சிக்காரருக்கு எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் முன்வைத்த உண்மைகளைக் கருத்திற்கொண்ட உச்ச நீதிமன்றம், வழக்கு தொடர்பாக ஏதேனும் வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகள் இருந்தால் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது. அத்துடன், இந்த மனுவை செப்டெம்பர் முதலாம் திகதிக்கு அழைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் 103 ஊழியர்களுக்குக் கொவிட் தொற்று!

நுரைச்சோலை லக் விஜய அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் 103 ஊழியர்கள் கொவிட் - 19 வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கல்பிட்டி வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சீனப் பிரஜைகள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்ட அனைவரும் ஆலையில் வேறு இடத்தில் தங்க வைக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்ட தொழிலாளர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திங்கட்கிழமை மேலும் ஆறு கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார். இதனையடுத்து தொற்றுநோயால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 594 ஆக உயர்ந்துள்ளது.

திங்கட்கிழமை பதிவான மரணங்களில் 04 ஆண்களும் 02 பெண்களும் அடங்குகின்றனர் என அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பாதிக்கப்பட்ட ஐந்து பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் ஏனையவர் 30 - 59 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சியோல் நகரில் வரலாறு காணாத மழை; 9 பேர் உயிரிழப்பு



தென்கொரியா நாட்டின் தலைநகர் சியோலில் மற்றும் மேற்கு துறைமுக நகரமான இன்சியான் பகுதிகளில் நேற்று வரலாறு காணாத மழை பதிவானது. ஒரு மணி நேரத்தில 100 மில்லிமீற்றர் மழை பெய்ததாக அந்நாட்டைச் சேர்ந்த யோன் ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கனமழைக்கு குறைந்தது 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 6 பேரை காணவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மழை பாதிப்பு காரணமாக தலைநகர் பகுதியில் உள்ள 230 குடும்பங்களைச் சேர்ந்த 391 பேர் பாதுகாப்பான பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

சாலைகள், ஆற்றங்கரை வாகன நிறுத்துமிடங்கள், ஐந்து தேசிய மலைப் பூங்காக்கள் பாதுகாப்புக்காக மூடப்பட்டன. எட்டு பயணிகள் படகுகளில் இருந்த எண்பத்தெட்டு பேர் மீட்கப்பட்டனர்.

மேலும் மாநகரப் பகுதியில் 300 மில்லிமீற்றர் வரை மழை பெய்யும் என தென்கொரியா வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது. வெள்ள சேதம் குறித்து கண்காணித்து வருவதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# கொரோனா வைரஸ் பாதிப்பின் எதிரொலி இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு நேபாளம்

இந்தியாவில் இருந்து நேபாளம் சென்ற 4 சுற்றுலாப் பயணிகளுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நேபாளம் வருவதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

அண்டை நாடான நேபாளத்தில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இந்தியாவில் இருந்து நேபாளம் சென்ற 4 சுற்றுலாப் பயணிகளுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகள் நேபாளம் வருவதற்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. கொரோனா பாதித்த 4 இந்தியர்களையும் சொந்த நாடு திரும்பும்படி கேட்டுக்கொண்டுள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# ஈரானின் கண்காணிப்பு செயற்கைக்கோள் விண்ணில் பாய்ந்தது

## விவசாயம், அறிவியல் கண்காணிப்புக்காக ஏவப்பட்டது



கஜகஸ்தானில் உள்ள பைக்கோனுர் ஏவுதளத்தில் இருந்து விவசாயம் மற்றும் அறிவியல் தொடர்பான பணிகளுக்காக ஈரானின் கண்காணிப்பு செயற்கைகோள் ரஷ்ய ரொக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஈரான் மற்றும் ரஷ்யா நாடுகளின் நலனுக்காக 'கயாம்' என்ற செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டதாக இருநாடுகளும் கூறியுள்ள நிலையில், இந்த செயற்கைகோள் இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் ராணுவ இலக்குகளை கண்காணிக்க உள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# ஆப்கானிஸ்தான் தலைநகரில் பிச்சை எடுப்பவர்கள் அதிகரிப்பு



தலிபான் ஆட்சி நடைபெற்று வரும் ஆப்கானிஸ்தானில் வறுமை மற்றும் வேலையின்மை அதிகரித்து வருகிறது. இதனால் காபூல் நகரில் பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அரசு அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கினால், அவர்கள் பிச்சை எடுக்க மாட்டார்கள் என்று சில குடியிருப்பாளர்கள் கூறினர் என டோலோ நியூஸ் தெரிவித்துள்ளது.

வீடு இருந்த போதும் போதிய பணம் இல்லாததால், நாங்கள் ஒரே கூடாரத்தின் கீழ் வாழ்கிறோம் என்று பிச்சைக்காரர் ஒருவர் தெரிவித்துள்ளார். உண்மையான பிச்சைக்காரர்களை கண்டறிந்து, அவர்கள் பிச்சை எடுப்பதை நிறுத்தவும் அவர்களுக்கு வேலை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆப்கான் தொழிலாளர் மற்றும் சமூக விவகார அமைச்சகமும் தெரிவித்துள்ளது.

பசி மற்றும் சுகாதார நெருக்கடி நிலை ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிரிவு இயக்குநர் ஜான் சிப்டன் தெரிவித்துள்ளார். சர்வதேச பொருளாதார கட்டுப்பாடுகள் அந்நாட்டை பேரழிவுக்கு தள்ளுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

# சீனாவை மிரட்டும் புதிய வகை வைரஸ் விலங்குகளிடம் இருந்து பரவியதாக தகவல்

சீனாவின் ஷான்டாங் மற்றும் ஹெனான் மாகாணங்களில் புதிய வகை வைரஸ் பரவி வருவதாகவும், இதுவரை 35 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர் எனவும் அந்நாட்டின் குளோபல் டைம்ஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு சீனாவில் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் தொண்டை சவ்வு பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் சோதனை செய்யப்பட்டதில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட லாங்யா ஹெனிப வைரஸ், விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு வந்திருக்கலாம் சீன மருத்து ஆராய்ச்சி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், சோர்வு, இருமல், பசியின்மை, குமட்டல் உள்ளிட்ட அறிகுறிகள் இருக்கின்றன எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். எனினும் இந்த வைரஸ் ஏற்படுத்தும் பாதிப்புகள் மிக தீவிரமானது அல்ல என்றும் இதனால் பொதுமக்கள் பீதிக் கொள்ள தேவையில்லை என்றும் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.



# கிரிமியாவில் உள்ள ரஷ்ய ராணுவத் தளம் மீது தாக்குதல்?

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ரஷ்யாவின் கிரிமியாவில் ராணுவ விமானத் தளம் உள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கிய போர் தற்போது வரை நீடித்து கொண்டிருக்கிறது. இங்கிருந்து உக்ரைனின் தெற்கு பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது. கிரிமியாவை கடந்த 2014ஆம் ஆண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தி தன்னுடன் இணைத்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கிரிமியாவில் உள்ள ரஷ்யாவின் ராணுவ விமான தளத்தில் திடீரென்று பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித் தன. இதனால் அங்கு தீப்பிடித்து எரிந்தது. அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்தது.

இதற்கிடையே ரஷ்யா ராணுவ தளம் மீது உக்ரைனில் இருந்து நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று தகவல் வெளியானது. ஆனால் அதை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்தது. இது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறும் போது, ராணுவ தளத்தில் வெடிமருந்துகள் வெடித்தன. தாக்குதல் எதுவும் நடக்கவில்லை. போர் விமானங்களுக்கு சேதம் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளது. அதே போல் ராணுவ தளத்தில் தாக்குதல் நடத்தவில்லை என்று உக்ரைனும் தெரிவித்தது. இதற்கிடையே ராணுவ தளத்தில் குண்டுகள் வெடித்ததில் ஒருவர் பலியானார். 8 பேர் காயம் அடைந்தனர் என்று கிரிமியா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

# பீகார் மாநில முதலமைச்சராக பதவியேற்றார் நிதிஷ்குமார்



பீகார் மாநிலத்தில் பா.ஜ.கவும் ஐக்கிய ஜனதா தளமும் கூட்டணி அமைத்து தேர்தலை எதிர்கொண்டன. தேர்தலின் பின்னராக, பா.ஜ.கவுடன் தொடர்ச்சியாக கருத்து முரண்பாடுகள் நிலவிய நிலையில் அக்கட்சியுடனான கூட்டணியை முறித்துக் கொள்வதாக நிதிஷ்குமார் நேற்று அறிவித்தார்.அதன்பின்னர், மாநில ஆளுநர் பாகு சவுகானை நேரில் சந்தித்து தமது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்கிறேன் எனவும் கடிதம் கொடுத்தார்.

இதற்கிடையே, ஐக்கிய ஜனதா தளத்துக்கு ஆர்.ஜே.டி., காங்கிரஸ், இடதுசாரிகள் கூட்டணி ஆதரவு அளித்துள்ளன. இதையடுத்து, பாட்னாவில் நடைபெற்ற எம்.எல்.ஏக்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் கூட்டணியின் தலைவராகவும் மாநில முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராகவும் நிதிஷ்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர், மீண்டும் ஆளுநரைச் சந்தித்த நிதிஷ்குமார், புதிய ஆட்சியை அமைக்க உரிமை கோரினார். தமது கூட்டணியிலுள்ள 160 எம்.எல்.ஏக்களின் ஆதரவுக் கடிதத்தையும் ஆளுநரிடம் நிதிஷ்குமார் வழங்கினார்.

இதனையடுத்து, பாட்னாவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நிதிஷ்குமார் அம்மாநிலத்தின் முதலமைச்சராக எட்டாவது முறையாக பதவியேற்றுள்ளார்.



# ஆம் ஆத்மிக்கு கோவாவில் அங்கீகாரம் வழங்கியது மாநில தேர்தல் ஆணையம்

டெல்லி மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் ஆட்சியில் உள்ள ஆம் ஆத்மி கட்சி, அந்த மாநிலங்களில் தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. தேசியக் கட்சி என்ற அங்கீகாரத்தை நெருங்க நினைக்கும் அந்தக்கட்சி, சட்டமன்றத் தேர்தலில் 2 எம்.எல்.ஏக்களையும் பெற்றது.

இந்த நிலையில், கோவாவிலும் கால்பதித்துள்ள ஆம் ஆத்மியை அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதனை பெருமை தரும் நிகழ்வாக பார்ப்பதாக கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இன்னும் ஒரு மாநிலத்தில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், ஆம் ஆத்மி தேசியக் கட்சியாக மாறும். இதற்காக அனைத்து தொண்டர்களும் உழைக்க வேண்டும் என கெஜ்ரிவால் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆம் ஆத்மியின் அடுத்த பெரிய இலக்காக குஜராத் மாநிலத் தேர்தல் இருக்கும் சூழலில், அங்கு மாவட்ட வாரியாக பிரசாரத்தை கெஜ்ரிவால் தொடங்கியிருக்கிறார். டெல்லி, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் அறிவித்தது போன்று குஜராத்திலும் ஆட்சியமைத்தால் 300 யுனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும் என அவர் வாக்குறுதி அளித்துள்ளார். வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் வரை மாதம் 3,000 ரூபா ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்தத் தேர்தலில் ஆம் ஆத்மியின் நகர்வுகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றன.

# ஒன்லைன் சூதாட்டத் தடைக்காக கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானம்

## டாக்டர் அன்புமணி வேண்டுகோள்



தமிழ்நாட்டை இன்று பீடித்துள்ள இரு பெருங் கேடுகள் ஒன்லைன் சூதாட்டமும் மதுக்கடைகளும்தான் என்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணிராமதாஸ்வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

இந்திய விடுதலை நாளான ஓகஸ்ட் 15 ஆம் திகதி, கிராம சபைக் கூட்டங்களை நடத்தும்படி தமிழ்நாட்டு அரசு ஆணையிட்டிருக்கிறது. மக்களாட்சியின் ஆணிவேர் கிராமசபைகள்தான். மக்களின் விருப்பங்களை ஆட்சியாளர்களுக்கு அழுத்தமாகத் தெரிவிப்பதற்கான கருவியும் அவைதான்.

தமிழ்நாட்டைஇன்றுபீடித்துள்ளஇருபெருங்கேடுகள் ஒன்லைன் சூதாட்டமும் மதுக்கடைகளும்தான். ஒன்லைன் சூதாட்டத்தால் கடந்த ஓராண்டில் மட்டும் 28 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மது அரக்கன் ஆண்டுக்கு இரு லட்சம் உயிர்களை பலி கொள்கிறான்.

இரு சமூகக்கேடுகளையும் ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஓங்கி ஒலித்தாலும், அவற்றின் தீமைகளை ஆட்சியாளர்களே ஒப்புக்கொண்டாலும் கூட, ஒன்லைன் சூதாட்டத்தையும் மதுவையும் தடை செய்வது தொடு வானத்தைப்போல நீண்டு கொண்டேதான் செல்கிறது. மக்களின் உணர்வுகளை அரசிடம் உரக்கச் சொல்லும் வகையில் வரும் 15 ஆம் திகதி நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் ஒன்லைன் சூதாட்டத் தடையையும் மது விலக்கையும் வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்காக கிராம சபைக் கூட்டங்களில் பா.ம.கவினர் அதிக அளவில் பங்கேற்க வேண்டும், என்று தனது அறிக்கையில் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

# சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை பாதிரியார் போக்சோ சட்டத்தில் கைது

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலைச் சேர்ந்த 45 வயதான பாதிரியாரான ஜான் ராபர்ட் என்பவர், தேவாலயங்களுக்கு வரும் 3 சிறுமிகள் மற்றும் ஒரு இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளா.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் இந்த விடயம் குறித்து, குழந்தைகள் நல அதிகாரிகளை தொடர்பு கொண்டு புகார் அளித்தனர். அந்தப் புகாரின் அடிப்படையில் குழந்தைதைகள் நல அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தேவாலயங்களுக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். அதில் பாதிரியார் ஜான் ராபர்ட், சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தமை உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து சிறுமிகள் பாலியல் தொல்லைக்கு உள்ளானமை குறித்து மண்டபம் காவல் நிலையத்தில் குழந்தைகள் நல அதிகாரிகள் புகார் அளித்தனர். அதன்பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி பாதிரியார் ஜான் ராபர்ட் மீது போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிந்து அவரைக் கைது செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளான தோணித்துறை, வலையர்வாடி, மரவெட்டிவலசை ஆகிய பகுதிகளில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் பாதிரியாராகவுள்ள ஜான் ராபர்ட் வழிபாட்டுக்கு வந்த சிறுமிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம் மண்டபம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க. ஆட்சியில் 20 ஆயிரம் கோடி ரூபா ஊழல் என எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



அ.தி.மு.க. தற்காலிக பொதுச் செயலாளரும் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி நேற்றுக் காலை சேலத்தில் இருந்து சென்னைக்கு ஓமலூர் வழியாக காரில் சென்றார். அவருக்கு தீவட்டிப்பட்டி பகுதியில் கட்சியின் சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன், ஜெயலலிதா பேரவை செயலாளர் மணி எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

அங்கு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய எடப்பாடி பழனிசாமி, சேலம் மாவட்டம் அ.தி.மு.கவுடைய கோட்டை. இன்றைக்கு தமிழ்நாட்டில் தி.மு.க. அதிக இடங்களிலே வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கலாம். ஆனால், சேலம் மாவட்டத்தில் 11 சட்டமன்றத் தொகுதிகளில் 10 தொகுதியில் வெற்றி பெற்றுள்ளோம். சேலம் மாவட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, முதியோர் உதவித்தொகை, பட்டா வழங்குவது, கூட்டு குடிநீர் திட்ட மூலம் குடிநீர் வழங்குதல் போன்றவை அடங்கலாக மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்து அ.தி.மு.க. நற்பெயரைப் பெற்றுள்ளது, என்று தெரிவித்திருக்கிறார்.

ஏழைகள் வசிக்கும் பகுதியிலே அம்மா கிளினிக் ஏற்படுத்தி அந்த பகுதியில் உள்ள பொது மக்களுக்கு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்த அரசாங்கம் அம்மா அரசாங்கம். இதை பொறுத்துக் கொள்ள முடியாத ஸ்டாலின், அ.தி.மு.க. கொண்டு வந்த ஒரே திட்டம் என்பதால் அந்த கிளினிக்கிற்கு மக்களிடம் அதிக அளவில் வரவேற்பு இருப்பதை எண்ணி கிளினிக்கை மூடியுள்ளார். நல்ல, நல்ல திட்டங்களை மூடு விழா நடத்துவதற்காகத்தான் இந்த அரசாங்கம் வந்ததே தவிர மக்களுக்கு நன்மை செய்ய வரவில்லை.

மக்கள் நலன் சார்ந்து அ.தி.மு.க. கொண்டு வந்த நல்ல திட்டங்களை எல்லாம் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். இந்த ஆட்சி மக்கள் விரோத ஆட்சி. முதலில் கருணாநிதி, அதன் பிறகு ஸ்டாலின், அதன் பிறகு உதயநிதி, அதன் பிறகு இன்பநிதி....! இது என்ன அரச பரம்பரையா? வேறு யாராவது முதலமைச்சரானால் அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்படிப்பட்ட கட்சிதான் தி.மு.க., அது கட்சி அல்ல, கோர்ப்பரேட் கம்பனி. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பதவியில் உள்ளனர்.

இந்த மக்கள் விரோத ஆட்சி விரைவில் வீட்டுக்கு போவது உறுதி. அனைத்து துறைகளிலும் கடந்த 14 மாத காலங்களில் தி.மு.க. 20 ஆயிரம் கோடி ஊழல் செய்துள்ளது. எனவே இந்த ஆட்சியை அகற்றிவிட்டு அம்மாவுடைய ஆட்சி மலர அனைவரும் அ.தி.மு.கவுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன், என்றும் எடப்பாடி பழனிசாமி கூறியிருக்கிறார்.




# நிந்தவூர்க் கரையோரத்தை சூறையாடும் கடல் அரிப்பு!

## ஒலுவில் துறைமுக சீரமைப்பால் வந்ததா?



(பாறுக் ஷிஹான்)

அண்மை நாள்களாக நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக கடலோரத்தை அண்டிய கரையோரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள் மற்றும் அவர்களின் பல்தேவைக் கட்டடங்களும் பாதிக்கப்பட்டு நாளுக்கு நாள் கடலினால் அள்ளுண்டு போகின்றன.

தொடர் கடலரிப்பின் காரணமாக மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளமையுடன் தங்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களைக் கலந்தாலோசித்துக் கொள்வதற்கும் அவற்றைச் சிறந்த முறையில் நிர்வகித்துக் கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அண்மையில் மீண்டும் திறக்கப்பட்ட ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தினால் இக்கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், உடனடியாக அதனை மூடும் பட்சத்தில் தொடர் கடலரிப்பைத் தடுக்க முடியும் எனவும் கருத்துக்களை ஊடகங்களிடம் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

மீளமைத்துத் திறக்கப்பட்ட துறைமுகத்திலிருந்து ஓரிரு கிலோ மீற்றர் தூரப் பிரதேசத்திலேயே இந்தக் கடலரிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொடர் கடலரிப்பின் மூலமாகப் பல பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தபோதும் அவற்றை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலகங்கள் மூலமாக சிறிது சிறிதாகவே முன்னெடுக்கப்பட்டன.

நிந்தவூர் 9 ஆம் பிரிவு பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள – மீனவர்களுக்குச் சொந்தமான – மீனவர் சங்கக் கட்டடம் தொடர் கடலரிப்புக் காரணமாக முழுமையாகக் கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டம் மீனவர் சங்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் மையமாகவும் நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு சனசமூக நிலையமாகவும் இயங்கி வந்தது. இதில் மீனவர்களின் கூட்டங்கள், வேறு சங்கங்களின் ஒன்றுகூடல்கள் மற்றும் இதர நிகழ்வுகள் நாள்தோறும் நடைபெற்று வந்தன. இந்தக் கட்டடத்தின் மேல் மாடியில் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

கட்டடத்தின் ஒரு பகுதி கடந்த காலங்களில் தொடர் கடலரிப்பின் காரணமாக கடலால் இழுத்துச் செல்லப்பட்டிருந்தது. மீதமாக இருந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி முழுமையாக கடலரிப்பினால் தற்போது சேதமடைந்துள்ளது. ஏனைய எஞ்சிய பகுதிகளும் இன்னும் ஓரிரு வாரத்தில் கடலினால் அள்ளுண்டு போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் குறிப்பிட்டனர்.

கடந்த காலத்தில் இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் தற்காலிகமாக மண்மூடைகள் நிரப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தாலும் கடல் அலைகளுக்கு அவையும் தாக்குப்பிடிக்க முடியாமல் அள்ளுண்டு போயின.

இவ்வாறான நிலை தொடர்ந்து செல்லுமானால் கடைசியில் கடற்கரை வீதியினூடாக பயணம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையும் நிந்தவூர் பிரதேசத்திற்கு ஏற்படும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டு மீளத் திறக்கப்பட்ட பின்னர் நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற அதிகமான கரையோரப் பிரதேசங்கள் கடல் அலையினால் காவு கொள்ளப்பட்டு இந்த நிலங்கள் இருந்த அடையாளமே தெரியாமல் செல்கின்றன என மீனவர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர். இதில் இப்பிரதேச மக்களின் தென்னந்தோப்புகள், மீனவர்களின் மீனவ வாடிகள் என பல அடக்கம்.

## நெச்சிமுனை பேச்சியம்மன் ஆலயத்தின் உற்சவம் கும்பம் சொரிதலுடன் நிறைவு






மட்டக்களப்பு கல்லடி உப்போடை – நெச்சிமுனை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் வங்கக் கடலில் கும்பம் சொரிதலுடன் நேற்று முன்தினம் நிறைவுபெற்றது.

பேச்சியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 31 ஆம் திகதி திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 8 நாள்கள் சிறப்பான முறையில் உற்சவங்கள் நடைபெற்றன. பக்தர்கள் மடிப்பிச்சை எடுத்தல் மற்றும் நெல்லுக்குற்றுதல் சடங்குகளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் விநாயகர் பானை மற்றும் பள்ளையப்பானை என்பன வலம்வருதல் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு பள்ளையம் படைத்து கன்னிமார் பூசை என்பன இடம்பெற்றமையுடன், அம்பாளின் திருக் கும்பங்கள் வங்கக் கடலில் சொரியப்பட்டதனைத் தொடர்ந்து ஆலய வருடாந்த உற்சவம் நிறைவு பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து இன்று வைரவர் பூசை இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## காணி அனுமதிப் பத்திரங்கள் இறக்காமத்தில் வழங்கிவைப்பு

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வரிப்பத்தான்சேனை – 03 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்டகாலமாகக் குடியிருந்துவரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், புதிதாகக் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஹான் (நளீமி) தலைமையில், பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்நிகழ்வு நடைபெற்றது.

காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர் உட்பட காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்களும் இதில் கலந்துகொண்டனர்.

## ஜி.பி.எம்.ஜி. துப்பாக்கியின் மண்டூரில் ரவைகள் மீட்பு!



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர், கோட்டைமுனை பகுதியில் ஒரு தொகை துப்பாக்கித் தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

புதைக்கப்பட்டிருந்த நிலையில் ஜி.பி.எம்.ஜி. துப்பாக்கியின் 570 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

பேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பிரதிப்பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் ஹரேந்திரன் நியமனம்

ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பிரதிப் பணிப்பாளராகசிரேஷ்டஊடகவியலாளர் கிருஷ்ணசாமி ஹரேந்திரன் நியமிக் கப்பட்டுள்ளார்.

20 ஆண்டுகளாக ஊடகத்துறையில் தனக்கென தனியிடத்தை வகித்து வரும் ஹரேந்திரன் கொழும்பு,பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பி.பி.சீ, ஜேர்மன் ரீ.வீ. உள்ளிட்ட பல் வேறு சர்வதேச ஊடக நிறுவனங்களிலும் ஹரேந்திரன் பணியாற்றியுள்ளார்.

சமூக ஆர்வலராகவும், யோகா பயிற்றுவிப்பாளராகவும், ஆளுமை விருத்தி விரிவுரையாளராகவும் பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தி வரும் ஹரேந்திரன், நேற்று ஜனாதிபதி ஊடகப்பிரிவின் தமிழ்ப் பிரிவிற்கு பொறுப்பாளராகவும், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# எம்.பிக்கள் மூவருக்கு மரண அச்சுறுத்தல்!

### சபையில் முறைப்பாடு

வசந்த யாப்பா பண்டார, திலக் ராஜபக்ஷ மற்றும் சமிந்த விஜேசிறி ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப் பட்டதாக நேற்று முறையிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலைமிரட்டல் விடுத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு வாக்குகள் சேகரிக்கப்பட்டன என தெரிகிறது.

எனவே, புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக அண்மையில் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் நியாயத்தன்மை தொடர்பாகக் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக சபாநாயகர் விசாரணை நடத்தி, புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட தேர்தல் முறையானதா இல்லையா என்பதை சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் யாப்பா பண்டார, தமக்கு இனந் தெரியாத அழைப்பாளர் ஒருவர், தொலைபேசியில் அழைத்து, நாடாளுமன்றத்தில் இருந்து விலக வேண்டும். இல்லையேல் மரணத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று அச்சுறுத்தினார் எனக் கூறினார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

## ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக மீண்டும் எழுவதற்கு நாங்கள் தயார்!

### நடிகை தமிதா அபேரத்ன எச்சரிக்கை



காலி முகத்திடல் போராட்டக்களத்தில் இருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளதாக நடிகையும் கோட்ட கோ கம செயற்பாட்டாளருமான தமிதா அபேரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், போராட்டம் இன்னும் முடியவில்லை என்று அவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நாங்கள் காலி முகத்திடலில் இருந்து உடல் ரீதியாக வெளியேறினாலும், போராட்டம் மிகவும் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.

எந்தவொரு ஊழல் அரசியல்வாதிகளுக்கும் எதிராக மீண்டும் எழுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார்.

காலி முகத்திடலில் போராட்டம் நடத்தப்பட்டு 124 நாள்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அந்த இடத்தில் இருந்த கூடாரங்களை அகற்றும் நடவடிக்கைகளில் போராட்டத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

# சட்டவிரோதமாக டீசலை பதுக்கிவைத்தவர் கைது!



புத்தளம் – தில்லையடி பகுதியில் டீசல் எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த சந்தேக நபரொருவர் புத்தளம் பொலிஸாரினால் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

டீசலை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருப்பதாக புத்தளம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது பதுக்கி வைத்திருந்த 35 லீற்றர் டீசல் எரிபொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தில்லையடிப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரொருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரையும், கைப்பற்றப்பட்ட டீசலையும் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டுக்கு பெருந்தொகைத் தங்கம் கொண்டுவந்த தம்பதியினர் கைது!



சுமார் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த தம்பதியரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் குழுவினர் நேற்று (செவ்வாய்க் கிழமை) மாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கொழும்பு வெல்லம்பிட்டிய பகுதியில் வசிக்கும் 35 வயதுடைய திருமணமான தம்பதிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் நேற்று (செவ்வாய்க் கிழமை) பிற்பகல் 02.30 மணியளவில் ஓமானின் மஸ்கட்டில் இருந்து ஓமன் எயார் நிறுவனத்தின் டபிள்யு.வை.-373 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் அணிந்திருந்த ஆடைகளுக்கு இடையில் இந்த நகைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றும் சுங்க அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கிளி.வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலை மருந்தகத்தில் தீ பரவி மருந்துகள் நாசம்








கிளிநொச்சி – வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலையின் மருந்தகம் தீக்கிரையாகியுள்ளது.

மருந்தகத்தில் ஏற்பட்ட மின்னொழுக்கு, குறித்த தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது, மருந்தகத்தில் வைக்கப்பட்டிருந்த மருந்துகள் உட்பட பொருள்கள், தளவாடங்களிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் அன்றையதினம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த மக்களுக்கான மருந்துவசேவை தடையின்றி நடைபெற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில், கிளிநொச்சி பொலிஸாரும், தடயவியல் பிரிவினர் மற்றும் பிராந்திய சுகாதார சேவையினர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.